பிரசார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

**13 08 2026 THURSDAY 6.30 PM**

## மாநிலச்செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** நாட்டுப்புற கலைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

**2)** தமிழகத்தில் பல்வேறு சுற்றுலாத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவாத் தெரிவித்துள்ளார்.

**3)** மாநிலத்தில் ஆயிரத்து **550** வேலைவாய்ப்புகளை உருவாக்கும் ஐந்து திட்டப்பணிகளை முதலமைச்சர் திரு விஜய் இன்று தொடங்கிவைத்தார்.

**4)** தமிழகத்தில் குடிநீர் தட்டுப்பாட்டை போக்க தவெக அரசு போர்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

**5)** அஸ்தானா சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் — சீனாவின் **Aoran Wang** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

- இனி விரிவான செய்திகள்-

<<<<<<>>>>>

நாட்டுப்புற கலைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டிதன் அவசியத்தை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று சங்கீத நாடக அகாடமி விருதுகளை வழங்கி பேசிய அவர், நாட்டுப்புற கலைகளின் பாரம்பரியத்தையும், கலாச்சாரத் தொன்மையையும் எதிர்கால சந்ததியினர் அறிந்துகொள்ளும் வகையில் இந்த கலைகளை ஆவணப்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நாட்டின் வளம் மிக்க நாட்டுப்புற கலைகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நமக்கு உள்ளதாகவும் குடியரசுத் தலைவர் கூறினார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான பல திட்டங்களுக்கு மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவாத் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில், அவர் எழுத்துப்பூர்வமாக அளித்துள்ள பதிலில், தேசிய சுற்றுலத்திட்டம், **Prashad** உள்ளிட்ட திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தேசிய சுற்றுலாத் திட்டத்தின்கீழ் இரண்டாவது கட்டமாக மாமல்லபுரம் கடற்கரை கோயில் பகுதியில் சிறந்த சுற்றுலா அனுபவத்

திட்டத்திற்கு, **30** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

ராமேஸ்வரம் தீவுப்பகுதியில் ஆன்மீக சுற்றுலாத் திட்டங்களுக்கு **20** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், காஞ்சிபுரம், வேளாண்கண்ணி ஆகிய இடங்களில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளுக்காக **19** கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

நவக்கிரக கோவில்கள் மேம்பாட்டுப்பணிகளுக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

மாநிலங்களின் மூலதன முதலீட்டு சிறப்பு உதவித் திட்டத்தின்கீழ், மாமல்லபுரத்தில் நந்தவன பாரம்பரிய பூங்கா அமைக்கவும், உதகை ரேஸ் கோர்சில் சூழல் இயல் பூங்கா அமைக்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக திரு கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில், **2** ஆயிரத்து **676** கோடி ரூபாய் முதலீட்டுடன் ஆயிரத்து **550** வேலைவாய்ப்புகளை உருவாக்கும் ஐந்து திட்டப்பணிகளை முதலமைச்சர் திரு விஜய் இன்று தொடங்கிவைத்தார்.

சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாட்டையொட்டி எட்டு புதிய திட்டப்பணிகளுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.

சிப்காட், டிட்கோ மற்றும் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், தமிழ்நாடு தொழில்துறை வீட்டுவசதி ஆகிய நிறுவனங்களின் இரண்டு திட்டங்களையும் அவர் தொடங்கிவைத்தார்.

மேலும், இந்த நிறுவனங்களுக்கான 13 கட்டிடங்களையும் அவர் திறந்துவைத்தார்.

ஒன்பது நிறுவனங்களில் பல்வேறு பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 20 பேருக்கு பணி நியமன ஆணைகளையும் முதலமைச்சர் திரு விஜய் வழங்கினார்.

<<<<<<>>>>>

சிறிய நீர்நிலைகளை ஒட்டி, சூரியஒளி தகடுகளை பயன்படுத்தி மின் உற்பத்தி செய்து மோட்டார் மூலம் நீர் இறைக்கும் சென்னை ஐ ஐ டி-யின் திட்டத்தை மாநில வேளாண்துறை அமைச்சர் திரு வினோத், சென்னை ஐ ஐ டி இயக்குநர் திரு காமகோடி ஆகியோர் திருவாரூர் மாவட்டம் நன்னிலத்தை அடுத்த விஷ்ணுபுரம் கிராமத்தில் இன்று தொடங்கிவைத்தனர்.

தமிழகத்தில் முதல் முறையாக செயல்படுத்தப்படும் இந்த திட்டத்தின்மூலம், விவசாயம் மற்றும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தேவையான தண்ணீர் கொண்டுசெல்லப்படும்.

தண்ணீர் ஆவியாவதை தடுக்கும் வகையில் இந்த திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

மாநிலத்தில் உள்ள அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு தேவையான பாடப்புத்தகங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவர் திரு லயோலா மணி தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்டம் காட்பாடியில் பாடபுத்தக கிடங்கை ஆய்வு செய்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், புத்தகங்கள் மாணவர்களுக்கு எவ்வித சேதமும் இன்றி பத்திரமாக அனுப்பி வைக்க வேண்டும் என்றும், கிடங்கை தூய்மையாக பராமரிக்க வேண்டும் என்றும் தாம் அலுவலர்களுக்கு அறிவுறுத்தியதாக கூறினார்.

மாணவர் சேர்க்கை அதிகரித்துள்ள இடங்களில் புத்தகங்கள் தட்டுப்பாடு ஏற்பட்டதாகவும், உடனுக்குடன் அதனை சரிசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

உருது பாடப்புத்தகங்கள் போதிய அளவில் வழங்கப்பட்டுள்ளதாகவும், பற்றாக்குறை இருப்பின் அதனை சரிசெய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு லயோலா மணி தெரிவித்தார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் குடிநீர் தட்டுப்பாட்டை போக்க தவெக அரசு போர்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், மாநிலத்தில் பரவலாக பல்வேறு இடங்களில் மக்கள் குடிநீருக்காக வீதியில் இறங்கி போராடும் நிலை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

வெப்பத் தாக்கத்தின் காரணமாக ஏரி, குளங்கள் வறண்டு நிலத்தடி நீர் மிகவும் குறைந்துவிட்ட நிலையில், அதனை எதிர்கொள்ள மாநில அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஏதும் எடுக்கவில்லை என்று அவர் குறை கூறியுள்ளார்.

மக்களின் தாகம் தீர்க்க ஆழ்துளை கிணறுகளை அமைப்பது, லாரிகள் மூலம் குடிநீர் வழங்குவது போன்ற உடனடி நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஏரி, குளங்களை தூர்வாருதல், சிறு தடுப்பணைகள் கட்டுதல் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

குடிநீர் விஷயத்தில் மாநில அரசு மெத்தன போக்குடன் செயல்படக்கூடாது என்றும் திரு நயினார் நாகேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

பள்ளி மாணவர்களிடையே அறிவியல் ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில், அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சி குழுமத்தின் சார்பில், திருவண்ணாமலை மாவட்டத்தில் **Jigyasa** திட்டத்தின்கீழ், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இம்மாவட்டத்தில் உள்ள வெம்பாக்கம், குப்பம், வாணாபுரம், ஆழிவிதைத்தாங்கி ஆகிய அரசு பள்ளிகளில் மாணவர்களை ஊக்குவிப்பதற்கான இரண்டு நாள் பயிலரங்கு நடைபெற்றது,

இப்பயிலரங்கு மாணவர்கள் விஞ்ஞானிகளுடன் நேரடியாக உரையாடி அறிவியல் குறித்து புரிந்துகொள்வதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது.

விஞ்ஞானிகள் உடனான உரையாடல் தங்களின் அறிவியல் ஆர்வத்தை தூண்டியுள்ளதாக மாணவர்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

***(Sound Byte — மாணவர்கள் - 30 Sec. )***

<<<<<<>>>>>

நீலகிரி மற்றும் தேனி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த **24** மணிநேரத்தில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

***(Sound Byte — வி ஆர் துரை — 35 Sec. )***

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

சென்னை நேரு உள்விளையாட்டரங்கில் **8** கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட செயற்கை இழை தடகள ஓடுதளத்தை மாநில விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜூனா இன்று திறந்துவைத்தார்.

------------

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் அஞ்சல் துறை சார்பில் தேசியக்கொடி பேரணி இன்று நடைபெற்றது.

--------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் நாளை நடைபெற உள்ளதாக ஆட்சியர் திருமதி சினேகா தெரிவித்துள்ளார்.

--------------

பெரம்பலூர் மாவட்டத்தை குப்பை இல்லா மாவட்டமாக மாற்றும் வகையில் தூய்மை பணிகளை ஆட்சியர் திருமதி ஷரண்யா அறி இன்று தொடங்கிவைத்தார்.

-------------

சிவகாசி அருகே நமஸ்கரித்தான்பட்டியில் உள்ள பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 2 பேர் உயிரிழந்தனர்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

அஸ்தானா சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் — சீனாவின் Aoran Wang இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 7-6, 6-4 என்ற செட் கணக்கில், ஜப்பானின் Yamato — Naoki Tajima இணையை வென்றது.

இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் Zeel Desai காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

------------------

தமிழ்நாடு பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், கோவை அணிக்கு எதிரான ஆட்டத்தில் 163 ரன் என்ற வெற்றி இலக்குடன் விளையாடி வரும் நெல்லை அணி சற்றுமுன்வரை 11 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 84 ரன் எடுத்துள்ளது.

**திண்டுக்கல்லில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், முதலில் பேட் செய்த கோவை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில், 9 விக்கெட் இழப்பிற்கு 162 ரன் எடுத்தது.**

**இரவு மணி 7.30-க்கு நடைபெறும் மற்றொரு ஆட்டத்தில் திருச்சி அணி — திருப்பூர் அணியை எதிர்கொள்கிறது.**

**<<<<<<<END>>>>>>**